# புக்கிட் பிந்தாங் வட்டாரத்தில் அந்நிய நாட்டவர்களின் சட்டவிரோத கூடாரங்கள் - வணிகத் தளங்கள் தகர்ப்பு






கோலாலம்பூர், டிச. 16-

கோலாலம்பூர் மாநகரில் பல்வேறு பகுதிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள், விற்பனைக் கடைகள் ஆகியவற்றுக்கு எதிராக மாநகராட்சி மன்றம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதில் ஒரு கட்டமாக கடந்த வாரம் புக்கிட் பிந்தாங் வட்டாரத்திலுள்ள ஜாலான் பெடாரா மற்றும் ஜாலான் அங்சோகா ஆகிய சாலைகளில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மாநகராட்சி மன்றத்தின் ஆலோசனை வாரியக் குழு உறுப்பினர் ஹென்றி லாய் தெரிவித்தார்.

பலமுறை எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இங்குள்ள வெளிநாட்டவர்கள் குறிப்பாக கள்ளக் குடியேறிகள் அதுபற்றி அக்கறை கொள்ளவில்லை.

இங்குள்ள உள்ளூர் நாட்டவர்களுக்கு பெரும் தொல்லை தரும் வகையில் அவர்கள் நடந்து கொள்கின்றனர்.

சட்டவிரோதமாக விற்பனைக்கடைகளையும் கூடாரங்களையும் அமைத்துக் கொண்டு இங்குள்ள சுற்றுப் பகுதிகளில் இவர்களின் நடமாட்டம் பெரும் தொல்லையை ஏற்படுத்தியது.

பொதுமக்கள் கொடுத்த புகாரையடுத்து கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் நடவடிக்கைகளை எடுக்கிறது. மாநகராட்சி மன்றம், காவல்துறை, தெனாகா நேஷனல் பெர்ஹாட், ஆயர் சிலாங்கூர் செண்டிரியான் பெர்ஹாட் ஆகியவற்றை சேர்ந்த சுமார் 103 பேர் கடந்த வாரம் அங்கு நடவடிக்கை களை மேற்கொண்டனர்.

கால்வாயிலுக்கு அருகிலும் வழிபாட்டுத் தலத்தை அமைத்துக் கொண்டு அந்நிய நாட்டவர்கள் சட்டவிரோத குடியிருப்புகளை அமைத்தனர். அதனால்தான் அங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதேசமயத்தில் ஜாலான் அங்சோகா அருகே ஜாலான் பொராங்கான் எனுமிடத்திலும் இதுபோன்ற சட்டவிரோத கூடாரங்களும் கடைகளும் அமைக்கப்பட்டிருப்பது தெரிய வந்திருக்கிறது. அந்த இடத்தை காலி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

புக்கிட் பிந்தாங் வட்டாரம் என்பது அனைத்துலக சுற்றுப் பயணிகளின் மையமாக இருக்கிறது. எனவே அந்த இடத்தில் இதுபோன்ற சட்டவிரோத நடவடிக்கை களுக்கு இடமளிக்க முடியாது என்றும் ஹென்றி லாய் கூறினார்.